ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரண்ட் - ஸ்வீட்ஸ் - ஈவெண்ட் கேட்ரிங்

# தி கோவை மெயில்

தமிழ் & ஆங்கில வார இதழ்

Sree Annapoorna Sree Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.
கோவை | சென்னை | திருப்பூர் | ஊட்டி | குன்னூர் | கோத்தகிரி | பொள்ளாச்சி | பழனி
Vol No. : 10 Issue No. : 33 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL வியாழன், நவ 9 - 18, 2023, 8 பக்கங்கள், ₹ 5/- ஆண்டு சந்தா - ₹ 260/-




இந்தியாவின் வீட்டு உபயோகப் பொருட்களின் தலை சிறந்த விற்பனையாளர்
BEA TM
ALWAYS ONE STEP AHEAD
MEGA DIWALI SALE
SCAN QR FOR OFFERS
அனைத்து வீட்டு உபயோகப்பொருட்களும் மிகக்குறைந்த விலையில்
LED, OLED, QLED
75" INCH TV JUST ₹89999*
65" INCH TV JUST ₹49999*
55" INCH TV JUST ₹39999*
43" INCH TV JUST ₹19999*
32" INCH TV JUST ₹9999*
CASH BACK UPTO 20%* (MAX ₹15000)
EMI STARTS FROM ₹994*
PER DAY COST ₹33*
REFRIGERATORS
REF DC JUST ₹11999*
REF FF JUST ₹19999*
REF SBS JUST ₹59999*
CASH BACK UPTO 25%* (MAX ₹12000)
EMI STARTS FROM ₹922*
PER DAY COST ₹31*
WASHING MACHINES
SA WM FL WM TL WM
FL WM JUST ₹24999*
TL WM JUST ₹13999*
SA WM JUST ₹8999*
CASH BACK UPTO 20%* (MAX ₹12000)
EMI STARTS FROM ₹888*
PER DAY COST ₹30*
MOBILE & ACCESSORIES
Smart Phone வாங்கும் போது Smart Watch or True wireless ₹499* மட்டுமே
DISHWASHERS
CASH BACK UPTO 15%* (MAX ₹4000)
EMI STARTS FROM ₹1950*
PER DAY COST ₹65*
AIR CONDITIONERS
CASH BACK UPTO 10%* (MAX ₹3500)
EMI STARTS FROM ₹1111*
PER DAY COST ₹37*
SMALL APPLIANCES
EXCLUSIVE BANK & FINANCE OFFERS FROM
BAJAJ FINSERV 1 EMI OFF* CASH BACK* (MAX ₹17500)*
IDFC FIRST Bank CASH BACK UPTO 10% (MAX ₹15000)*
HDB FINANCIAL SERVICES From the trusted family of HDFC Bank CASH BACK UPTO 10% (MAX ₹10000)*
HDFC BANK INSTANT DISCOUNT UPTO 10% (MAX ₹2000)*
kotak Kotak Mahindra Bank INSTANT DISCOUNT UPTO 10% (MAX ₹2500)*
AMERICAN EXPRESS INSTANT DISCOUNT UPTO 7.5% (MAX ₹5000)*
pine labs INSTANT DISCOUNT (MAX ₹2000)*
onsitego நீட்டிக்கப்பட்ட உத்திரவாதம்*
FREE GIFTS FOR EVERY PURCHASE*
(NECK BAND) ₹1799 (TWS) ₹2999 (SMART WATCH) ₹5999 (WIRELESS ROGUE) ₹2999 (TROLLEY) WORTH ₹8500 (BOTTLE) (TAWA) (UMBRELLA)
₹1 முன் பணம்*
36 மாதம் வரை தவணை வசதி*
20% வரை உடனடி கேஷ் பேக்*
ஒரு மாதம் தவணை இலவசம்*
*T&C APPLY
FOR ENQUIRIES: : +91 98423 44323 | : customercare@bharathelectronics.in | : www.bharathelectronics.in
For corporate bookings or bulk orders, mail us: rajesh@bharathelectronics.in
BEA ALWAYS ONE STEP AHEAD
பாரத் எலக்ட்ரானிக்ஸ் & அப்ளையன்ஸஸ்
• 100 அடி ரோடு PH: 73730 44320 • திருச்சி ரோடு PH: 73730 48746 • G.N MILL PH: 73730 44329 • சிங்காநல்லூர் PH: 73730 48747 • OPP TO PROZONE MALL PH: 80125 69900
• குனியமுத்தூர் PH: 98652 48608 • மருதமலை மெயின் ரோடு, வடவள்ளி PH: 63840 00334 • மேட்டுப்பாளையம் PH: 96554 18181
LG BEST SHOP Saravanampatti, Coimbatore - 35. PH: 96558 16161
SAMSUNG SMART PLAZA Thadagam Road, Venkatapuram Coimbatore -12. PH: 73730 44323
கோவை | திருப்பூர் | ஈரோடு | சத்தியமங்கலம் | சேலம் | நாமக்கல் | திருச்செங்கோடு | பொள்ளாச்சி | உடுமலைப்பேட்டை | தாராபுரம் | திருஷ்ணகிரி | தருமபுரி | ஆத்தூர் | கள்ளக்குறிச்சி | பல்லடம் | திருச்சி | மேட்டுப்பாளையம்


SKS
Express Love Sweetly
Sri Krishna® Sweets
Authentic.
Curated.
Celebrated.
Delight your loved ones
with the best ever Mysurpa!
THE ORIGINAL MAKERS OF Mysurpa
The Journey of Mysurpa
Mysurpa
100% Cow Ghee Sweet
Sri Krishna® Sweets
Mysurpa
Melts your heart
Gift The Best
Deepavali
Special
Mysurpa Tin!
*Conditions apply. Till stock lasts.
www.srikrishnasweets.net
FOR BULK ORDERS
1800-120-00-1515
97 15 15 15 15
BUY ONLINE AT
www.buykrishnasweets.com

# Preventing Stroke is Easy!

## Reach KG Hospital whithin 3 hours

✍ **R.Madhumitha,** *The Covai Mail*

Nearly every 40 seconds, someone experiences a stroke, leading to a stroke-related death every 4 minutes. The first 3 hours are called the golden hours. After this period, administering medicine may not provide significant help.

Stroke is the leading cause of death worldwide. Statistics show that in India, stroke ranks the second most common cause of disease-related deaths, affecting about 1,85,000 people annually. Nearly every 40 seconds, someone experiences a stroke, leading to a stroke-related death every 4 minutes.

Research results suggest that 8 crore people worldwide have survived and recovered from strokes, yet many face ongoing challenges and disabilities. Timely treatment and proper training, however, can empower individuals to lead meaningful lives post-stroke.

In today's lifestyle, we often hear about this prevalent disease impacting people close to us. Doctors at KG Hospital, one of the leading hospitals in Coimbatore, gave us detailed advice and explanations on Stroke, its causes and available treatment methods.



## Recognize the symptoms and act quickly


**- Dr. G. Bakthavathsalam,** *Chairman*

Stroke is a serious condition that can leave a person paralyzed, hindering their daily activities. Dr. G. Bakthavathsalam, emphasized that paying attention to our daily lives can help to prevent strokes.

When a stroke occurs, it means that the blood flow to the brain is blocked, causing damage to brain cells and muscles due to a lack of necessary energy. The effects on the body depend on which part of the brain is affected. Knowing the causes and acting swiftly is crucial for recovery.

We all should remember 'BE FAST' to ease the symptoms of stroke: Balance loss, Eyesight issues, Face pulling to one side, Arm weakness, Slurred Speech, and the importance of seeking Timely medical help. Recognizing and responding to these signs promptly can significantly reduce the damage caused by a stroke.

Preventing a severe stroke is much easier than recovering from one. Dr. G. Bakthavathsalam suggested understanding the disease's causes and seeking timely medical help from a hospital with a 24-hour intensive care unit, such as KG Hospital, to overcome it.




## Centre for Cerebrovascular Diseases



**Dr. Rajkumar, Brain and Spine Surgeon**

Dr. Rajkumar, a Brain and Spine Surgeon, explained in detail the risk factors, effects, treatment, and preventive methods for strokes.

There are various options for stroke treatment, and the best approach depends on factors like age, health, medical history, severity, location, cause, and type of stroke. Surgery might be necessary in some cases, with different surgical options tailored to the specific stroke type.

Ischemic stroke treatment often involves removing blockages through endovascular surgeries, while hemorrhagic stroke may require relieving brain pressure and repairing blood vessels. Our Center for Cerebrovascular Diseases specializes in rapid and advanced assessment and treatment for stroke patients. Stroke is an emergency, and the highest chance of recovery occurs when treatment is initiated promptly.

## Two types of brain damage

**Dr Rajarajan, Radiologist**



Dr. Rajarajan pointed out that some people who suffer from stroke may lose their ability to speak, so if the disease is diagnosed and treated early, it leads to permanent relief from it.

The human brain can get two types of stroke, **"ischemic"** and **"hemorrhagic"**. About 80 percent of strokes are mostly ischemic, occurring when blood vessels leading to the brain get narrowed, cutting off blood flow. Strokes from large blood vessel blockages are more likely to be fatal than a stroke caused by a small blood vessel occlusion.

Symptoms of a stroke may not be as severe and painful as those of a heart attack. Stroke symptoms includes sudden numbness or weakness on one side of the body, dizziness, loss of balance, or coordination while moving.

Also, if you have symptoms such as a sudden, severe headache for no apparent reason, seek medical help immediately and find out when the symptoms started. He advised that quick action can save us from the deadly disease of stroke.

## Time slows us down

**Dr. Ramakrishnan, Neurologist**



"Immediate medical attention within the hours of a stroke can prevent damage," said Dr. Ramakrishnan, Neurologist.

Anticoagulants should be administered within three hours of a stroke. IV thrombolysis or mechanical thrombectomy is the most effective way to save the brain and reduce post-stroke disability. The damaged blood vessel without blood flow to the brain is repaired as quickly as possible and brought back to normal.

While stroke mostly affects those above 40, it may can happen at any age. To prevent damage, appropriate tests and medicines need to be given within three hours of diagnosis. After this golden hour, even if medicine is administered, it may not be as effective.

TPA (tissue plasminogen activator), a clot-dissolving drug, is injected within three hours of a non-hemorrhagic stroke to prevent further brain damage. Blood thinners are also given to all stroke patients to prevent blockages. These treatments aim to maintain normal blood flow to the brain and prevent strokes.

## Treatment to restore blood flow

**Dr Sabareesh, Interventional Radiologist**



Don't take anything lightly, the cause of the stroke should be identified first, said Dr Sabareesh.

Is the stroke caused by bleeding in the brain? Or Is it because of a blood vessel blockage? A CT or MRI scan helps in this diagnosis. If a blood vessel blockage is identified within the first 3 hours, drugs like Clot Buster, which dissolve blood clots, are given. This process is called thrombolysis which is effective for some patients with large blood clots. In case of allergic reactions, mechanical thrombectomy, a modern innovation, is administered to remove blood clots and restore blood flow, saving the brain tissue from danger.

> **"Strokes caused by large blood vessel occlusions are more likely to be fatal than strokes caused by small blood vessel occlusions"**
>
> *- Dr. Ramakrishnan*




## Essential Treatment for Stroke

**Karunakaran, Advisor Radiologist**



"If anyone in the family is infected with the disease, you should be focused on the factors that can lead to an immediate stroke and keep yourself under control," said Doctor Karunakaran.

People with conditions like high blood pressure, heart disease, and diabetes should not consider stroke symptoms easily. Risks for stroke is about 30 percent higher for those with diabetes. Also, people with shortness of breath during sleep should take appropriate treatment to avoid risks like high blood pressure, heart failure, heart attacks, and strokes. Lifestyle factors like smoking, alcohol consumption, and obesity can also increase stroke risk, making regular exercise essential

It is important to perform full physical examinations, including sugar, fat and heart once a year. Dr. Karunakaran emphasized that neglecting these aspects could lead to the serious impact of a stroke, making it vital to protect ourselves through proactive measures.

# பக்கவாதத்திற்கு வேண்டும் ‘வேகம்’

## மூன்று மணி நேரத்திற்குள் கே.ஜி மருத்துவமனையை வந்தடைய வேண்டும்

✍ ப.சுகன்யா, தி கோவை மெயில்

உலகம் முழுவதிலும் ஏற்படும் நோய் காரண உயிரிழப்புகளில் பக்கவாத நோய் முன்னணி வகிக்கிறது. இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1,85,000 பேருக்கு பக்கவாதம் ஏற்படுகிறது. கிட்டதட்ட ஒவ்வொரு 40 வினாடிக்கு ஒருவர் பக்கவாத நோயால் பாதிக்கப்படுகிறார்கள். 4 நிமிடத்துக்கு ஒருவர் பக்கவாத நோயால் இறக்கின்றனர். இந்தியாவில் நோய் இறப்புக்கான இரண்டாவது பொதுவான காரணங்களில் பக்கவாதம் உள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், உலகம் முழுவதிலும் 8 கோடி மக்கள் பக்கவாதத்திலிருந்து உயிர் பிழைத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என சமீபத்திய ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட பெரும்பாலானோர் சகஜமான நிலையில் வாழ்வதில்லை. பக்கவாதத்தால் ஏற்பட்ட குறைபாடுகளுடன் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், சரியான நேரத்தில் சிகிச்சை எடுத்துக் கொள்வதாலும், முறையான பயிற்சியினாலும் ஒரு அர்த்தமான வாழ்க்கையை வாழ இயலும். எங்கோ, யாருக்கோ என கேள்விப்பட்ட இந்த நோய் இன்றைய வாழ்வியல் முறையினால் நம்மை சார்ந்த பலருக்கும் ஏற்படுவதை அடிக்கடி கேள்விப்பட முடிகிறது.

பக்கவாதம் என்றால் என்ன, எதனால் ஏற்படுகிறது, இதற்கான சிகிச்சை முறைகள் என்ன என்பதை நம்மிடம் விரிவான ஆலோசனைகள், விளக்கங்களை தருகின்றனர் கோவையின் முன்னணி மருத்துவமனைகளில் ஒன்றான கே.ஜி மருத்துவமனை மருத்துவர்கள்.

## விரைவாக செயல்பட்டால் போதும்


டாக்டர் கே.ஜி.பக்தவத்சலம்

மனிதனை அன்றாட செயல்களை செய்ய விடாமல் ஓர் இடத்தில் முடக்கி போடும் ஒரு அபாய கரமான நோய் பக்கவாதம். இதில் இருந்து தப்பிக்க நமது வாழ்வியல் முறையில் கவனம் செலுத்தினால் போதும் பக்கவாதம் நோய் ஏற்படாமல் தடுக்க முடியும் என்கிறார் கே.ஜி மருத்துவமனை தலைவர் டாக்டர் ஜி.பக்தவத்சலம்.

மூளைக்கு போகும் ரத்த ஓட்டம் தடைப்பட்டு, மூளை இயங்குவதற்கு தேவையான சக்தி இல்லாமல், மூளையின் செல் தசைகள் பாதிப்படையும் சமயத்தில் நம் உடலில் பக்கவாதம் ஏற்படுகிறது. மேலும், மூளையின் எந்த பகுதி பாதிக்கப்பட்டுள்ளதோ, அதை பொறுத்து நம் உடலின் பாகங்களில் குறைபாடுகள் ஏற்படும். இத்தகைய கொடிய பாதிப்பில் இருந்து நாம் மீண்டு வரவேண்டும் என்றால் முதலில் அதன் காரணிகளை தெரிந்து கொள்ள வேண்டும். இதுமட்டுமின்றி துரிதமாக செயல்பட்டால் மட்டுமே பக்கவாதத்திலிருந்து மீண்டு வர முடியும் என்கிறார்.

மேலும், பக்கவாதத்தின் அறிகுறிகளை எளிதாக *BE FAST* என்று நினைவில் கொள்ள வேண்டும். *Balance:* உடற்சமநிலை இழப்பது, *Eyes* :ஒன்று அல்லது இரண்டு கண்களிலும் பார்வை குறைபடுதல், *Face:*முகம் ஒரு புறமாக இழுத்து கொள்ளுதல், *Arm:* ஒரு பக்க கை, கால்கள் பலவீனமடைந்து செயல்பட இயலாது போகுதல், *Speech:* பேச்சில் தடுமாற்றம், குளருதல், *Time* : சரியான நேரத்தில் மருத்துவ உதவியை நாட வேண்டும்.

போன்ற அறிகுறிகளை உணர்ந்து செயல்பட்டால், பக்கவாதத்தால் ஏற்படும் பாதிப்பை வெகுவாக குறைக்க முடியும். கொடுமையான பக்கவாதத்திலிருந்து மீண்டு வருவதைக் காட்டிலும், பாதுகாத்தல் மிகவும் எளிது. நோய் காரணிகளை உணர்ந்து, தக்க நேரத்தில் கே.ஜி மருத்துவமனையை போன்று 24 மணி நேரமும் தீவிர சிகிச்சை பிரிவு இயங்கும் மருத்துவமனை மருத்துவரை அணுகினால் போதும் பாதிப்பில் இருந்து விடுபடலாம் என்கிறார் டாக்டர் ஜி.பக்தவத்சலம்.

## இரண்டு வகையாகப் பாதிக்கப்படும் மூளை

### Dr.இராஜராஜன், ரேடியாலஜிஸ்ட்

பக்கவாதம் ஏற்பட்ட சிலருக்குப் பேசும் திறன் அற்றுப் போகும் என்பதால் இந்த நோயை ஆரம்பக் கட்டத்திலேயே அறிந்து இதற்கான சிகிச்சை எடுத்துக் கொண்டால் பக்கவாதத்தில் இருந்து நிரந்தர தீர்வு கிடைக்கும் என்கிறார் மருத்துவர் இராஜராஜன், ரேடியாலஜிஸ்ட்.

மனிதனின் மூளையானது இரண்டு வகையான பக்கவாதத்தால் பாதிக்கப்படுகிறது, “இஸ்கிமிக்” மற்றும் “ஹெமோர்ராஜிக்”. நம்மை பாதிக்கும் 80 சதவீத பக்கவாதம் பெரும்பாலும் இஸ்கிமிக் ஆகும். மூளைக்கு செல்லும் சிறிய அல்லது பெரிய ரத்தக் குழாய்கள் சுருங்கி ரத்த ஓட்டம் இல்லாமல் இருக்கும் போது இஸ்கிமிக் பக்கவாதம் ஏற்படுகிறது. இதில், சிறிய ரத்தக் குழாய் அடைப்பால் ஏற்படும் பக்கவாதத்தை விட பெரிய ரத்தக் குழாய் அடைப்பால் நிகழும் பக்கவாதத்தால் உயிர் இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

பக்கவாதத்தின் அறிகுறிகள் மாரடைப்பு ஏற்படுவதை போன்று கடுமையான, வேதனை அளிக்கும் அறிகுறிகளாக இருக்காது. குறிப்பாக உடலின் ஒரு பக்கத்தில், திடீரென உணர்வின்மை அல்லது முகம், கை அல்லது கால் பலவீனம் அடைவது. நடைபயிற்சி அல்லது நடக்கும்போது தலைச்சுற்றல், சமநிலை அல்லது ஒருங்கிணைப்பு இழப்பது. மேலும், எந்த காரணமும் இல்லாமல் திடீரென ஏற்படும் கடுமையான தலைவலி போன்ற அறிகுறிகள் இருந்தால் உடனடியாக மருத்துவ உதவியைப் பெற்று, அறிகுறிகள் எப்போது ஆரம்பித்தன என்பதை கண்டறிய வேண்டும். விரைவாக செயல்பட்டால் பக்கவாதம் என்ற கொடிய நோயில் இருந்து நம்மை மீட்டெடுக்க முடியும் என்று அறிவுறுத்துகிறார்.



## காலம் தாழ்தினால் நம்மை முடைக்கிவிடும்

### Dr. ராமகிருஷ்ணன், நியூராலஜிஸ்ட்



பக்கவாதம் ஏற்பட்ட சில மணிநேரங்களுக்குள் சிகிச்சை கொடுக்கப்பட்டால் மட்டுமே பாதிப்பு ஏற்படாமல் தடுக்க முடியும். ஆகையால், உடனடி மருத்துவ கவனிப்பு முக்கியம் என்கிறார் மருத்துவர் ராமகிருஷ்ணன், நியூராலஜிஸ்ட்.

பக்கவாத பாதிப்பு ஏற்பட்டவுடன், ரத்த உறைவைத் தடுக்கும் மருந்தை மூன்று மணி நேரத்திற்குள் கொடுக்க வேண்டும். மூளையைக் காப்பாற்றுவதற்கும் பக்கவாதத்திற்கு பிந்தைய இயலாமையை குறைப்பதற்கும் மிகச் சிறந்த வழியாக *IV* த்ரோம்போலிசிஸ் அல்லது மெக்கானிக்கல் த்ரோம்பெக்டோமி உள்ளது.

இது, மூளையில் ரத்த ஓட்டம் இல்லாமல் பாதிக்கப்பட்ட ரத்த நாளத்தை முடிந்தவரை விரைவாக மறுசீரமைத்து இயல்பு நிலைக்கு கொண்டு வருகிறது.

பெரும்பாலும், 40 வயதுக்கு மேற்பட்டோர் அதிகம் பக்கவாதத்தால் பாதிப்பு அடைகின்றனர். முதியோர் மட்டுமல்லாமல் இளைஞர்கள், குழந்தைகள் என அனைத்து வயதினரையும் இந்த நோய் பாதிக்கும். அதனால், அறிகுறி தெரிந்த உடனே மருத்துவமனைக்கு செல்வோருக்கு உரிய பரிசோதனைகள் செய்து, மருந்துகள் செலுத்தினால் பாதிப்பை தடுக்க முடியும். மூன்று மணிநேரம் கடந்து அதன் பிறகு வருவோருக்கு, மருந்து செலுத்தினாலும் பயன் இருக்காது. அதனால்தான் முதல் மூன்று மணி நேரத்தை பொன்னான நேரம் என்கிறோம்.

ரத்தக்கசிவு இல்லாத பக்கவாதம் ஏற்பட்ட மூன்று மணி நேரத்திற்குள் ரத்த உறைதலை உடைக்கும் மருந்தான *TPA* (டிஷ்யூ பிளாஸ்மினோஜென் ஆக்டிவேட்டர் *tissue plasminogen activator*) செலுத்தும்போது மேலும் மூளையில் பாதிப்பு ஏற்படாமல் தடுக்கிறது. அதோடு, ரத்தத்தை மெல்லியதாக மாற்றும் மருந்துகளும் அனைத்து பக்கவாத நோயாளிகளுக்கும் செலுத்தப்படும். மூளைக்கு ரத்த ஓட்டம் தடைபடாமலும், பக்கவாதம் ஏற்படாமலும் தடுக்க இந்த சிகிச்சைகள் செய்யப்படுகிறது என்கிறார்.

## வாழ்நாள் முழுவதும் தொடரும்

### Dr. ராஜ்குமார், மூளை, முதுகெலும்பு அறுவை சிகிச்சை நிபுணர்



சாலை விபத்துகளுக்கு அடுத்தாக அதிக உயிரிழப்புகள் பக்கவாதத்தினால் ஏற்படுகிறது என எச்சரிக்கிறார் மருத்துவர் ராஜ்குமார், மூளை மற்றும் முதுகெலும்பு அறுவை சிகிச்சை நிபுணர்.

இருதயத்தில் ஏற்படும் மாரடைப்பு போன்று மூளையில் ஏற்படும் அடைப்பைப் பக்கவாதம் என்கிறோம். இதயத்திலிருந்து ரத்தக் குழாய்கள் வழியாக மூளைக்குத் தேவையான சத்துக்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. அப்போது, ரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படுகையில் மூளையின் சில பாகங்கள் செயல் இழக்கும், அதேசமயத்தில் நம் உடலிலும் சில பாகங்கள் செயலிழந்து விடும். இதைதான் பக்கவாதம் என்கிறோம். இந்த பாதிப்பு அறிகுறி தென்பட்டவுடன் முதலில் மூளை நரம்பியல் மருத்துவரை அணுக வேண்டும். நாம் தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும் மூளையில் பாதிப்புகள் அதிகரிக்கும். காலம் கடந்து சிகிச்சை எடுத்துக் கொண்டால் இணை பாதிப்புகளும் நம் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து பிறருக்குச் சுமையாகி குறைபாடுகளுடன் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். அதனால்தான் ***“Time is Brain”*** என்கிறோம்.

எனவே, பாதிப்பு ஏற்பட்டவுடன் மருத்துவமனைக்குச் சென்றால், ரத்தப் பரிசோதனை, மருத்துவர் பரிசோதனை மற்றும் ஸ்கேன் பரிசோதனை நடத்தப்பட்டு அடுத்த 30 நிமிடத்தில் மருந்துகள் செலுத்தப்பட்டு மூளையில் ரத்த ஓட்டம் சரிசெய்யப்படும். மேலும், நம் உடல் உறுப்புகளை இயல்பு நிலைக்குக் கொண்டுவர முடியும் என்கிறார்.

## மீண்டும் ரத்த ஓட்டம் சீரடையும்

### Dr. சபரீஷ், இன்டர்வென்ஷனல் ரேடியாலஜிஸ்ட்

எதையும் எளிதாக எடுத்துக் கொள்ளாமல், பக்கவாதம் ஏற்பட்டதற்கான காரணங்களை முதலில் கண்டறிய வேண்டும் என்கிறார் மருத்துவர் சபரீஷ், இன்டர்வென்ஷனல் ரேடியாலஜிஸ்ட்.

மூளையில் ரத்தப்போக்கு காரணமாக பக்கவாதம் ஏற்பட்டதா? இல்லை ரத்தக் குழாயின் அடைப்பு காரணமா? என்பதைக் கண்டறிய *CT* அல்லது *MRI* ஸ்கேன் செய்ய வேண்டும். இந்த இரண்டு முறையும் வெவ்வேறு என்பதால் இது மிகவும் முக்கியமானதாகும். மூளையில் ரத்தக் குழாயின் அடைப்பு காரணமாக பக்கவாதம் ஏற்பட்டு இருந்தால் முதல் 3 மணி நேரத்திற்குள் ரத்த உறைவைக் கரைக்கும் மருந்தான க்ளாட் பஸ்டர் உள்ளிட்ட மருந்துகள் பாதித்தவர்களுக்கு செலுத்தப்படும். இந்த ரத்த உறைவைக் கரைக்கும் செயல்பாடுகள் த்ரோம்போலிசிஸ் எனப்படுகிறது. அதேபோல், பெரிய ரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டவர்களுக்கு த்ரோம்போலிசிஸ் சிகிச்சை முறையானது சிலவகை நோயாளிகளுக்கு திறம்பட செயல்படுகிறது. மேலும், பாதிப்பு ஏற்பட்டு நேரம் கடந்துவிட்டால் த்ரோம்போலிசிஸ் முறையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் மெக்கானிக்கல் த்ரோம்பெக்டோமி என்ற சிகிச்சை நோயாளிகளுக்கு செலுத்தப்படும்.

நுண்துளையிட்டு செய்யப்படும் மெக்கானிக்கல் த்ரோம்பெக்டோமி சிகிச்சை முறை தற்போதைய நவீன காலத்திற்கு ஏற்ப இருப்பதால் மருத்துவ உலகில் மிகப்பெரிய கண்டுபிடிப்புகளில் ஒன்றாக கருதப்படுகிறது.

இந்த முறையில் கருவிகளை பயன்படுத்தி ரத்த கட்டிகள் அகற்றப்பட்டு மீண்டும் ரத்த ஓட்டம் சீரடைய செய்கிறது. மேலும், ரத்த ஓட்டம் இல்லாமல் இருந்த மூளை திசுக்களுக்கு ரத்த ஓட்டத்தை உண்டாகி அபாயத்தில் இருந்து காப்பாற்றுகிறது எனக் கூறினார்.



## பக்கவாதத்திற்கு இன்றியமையாத சிகிச்சை

### Dr. கருணாகரன், ரேடியாலஜிஸ்ட்



குடும்பத்தில் யாருக்கேனும் பக்கவாதநோய் பாதிப்பு ஏற்பட்டு இருந்தால், உடனே பக்கவாதம் ஏற்படுத்தக் கூடிய காரணிகளில் கூடுதல் கவனம் செலுத்தி, உங்களை நீங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகிறார் மருத்துவர் கருணாகரன், ஆலோசகர் ரேடியாலஜிஸ்ட்.

ரத்தக் கொதிப்பு உள்ளவர்கள், இருதய நோய் கொண்டவர்கள், நீரிழிவு நோய் உடையவர்கள் பக்கவாத அறிகுறிகளை எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம். இருதயத்தில் ஏற்படும் சில நோயாலும், அடைப்புகளாலும் கூட பக்கவாதம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. மேலும், நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பக்கவாதம் வருவதற்கான வாய்ப்புகள் தோராயமாக 30 சதவீதம் வரை உள்ளதால் கூடுதல் கவனத்துடன் இருப்பது அவசியம். மேலும், உறக்கத்தின் போது ஏற்படும் மூச்சு திணறல் பிரச்னை உள்ளவர்கள் அதற்கான சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில், உயர் ரத்த அழுத்தம், இதய செயலிழப்பு, மாரடைப்பு மற்றும் பக்கவாதம் போன்ற அபாய விளைவுகளை ஏற்படுத்திவிடும். புகை பிடிப்பது, மது அருந்துவது, உடல் பருமன் உள்ளிட்ட காரணிகளும் பக்கவாதத்தை ஏற்படுத்தக் கூடும். மேலும், இதற்கு உடற்பயிற்சி ஒரு இன்றியமையாத சிகிச்சையாகும்.

ஆண்டுக்கு ஒரு முறை சர்க்கரை, கொழுப்பு, இருதயம் உள்ளிட்ட முழு உடல் பரிசோதனைகளை செய்து கொள்வது அவசியம். அலட்சியமாக இருந்தால் பக்கவாதம் என்ற கொடிய நோயினால் பாதிக்கப்பட்டு பிறருக்கு சுமையாகிவிடுவோம். ஆகையால், பாதிப்பு ஏற்படும் முன் நம்மை தற்காத்துக் கொள்வோம் என்கிறார் மருத்துவர்.


Dr. கே.ஜி.பக்தவத்சலம் | Dr. ராமகிருஷ்ணன் | Dr.இராஜராஜன் | Dr.சபரீஷ் | Dr.ராஜ்குமார் | Dr. கருணாகரன்

# பலகாரம், பட்டாசு, கொண்டாட்டம் தீபாவளி!

நம் தேசத்தில் கொண்டாடப்படும் திருவிழாக்களில் தீபாவளி முதன்மையான விழாக்களில் ஒன்றாக உள்ளது. சத்குரு தன் பால்ய நாட்களில் தீபாவளி கொண்டாடிய அனுபவங்களையும், நம் கலாச்சாரத்தில் பண்டிகைகள் ஆன்மீக வளர்ச்சிக்கு துணைநிற்கும் விதமாக உருவாக்கப்பட்டுள்ளது பற்றியும் பேசுகிறார். ஒவ்வொரு நாளையும் நாம் தீபாவளி பண்டிகை போல கொண்டாடுவதற்கான சாத்தியம் இருப்பதை பற்றி சத்குரு சொல்லும் கருத்துக்களை தொடர்ந்து படித்தறியுங்கள்!

சத்குரு: மக்கள் ஒன்றாகக் கூடுவது, இல்லங்களை அலங்கரிப்பது, ஒவ்வொரு வீட்டையும் ஒவ்வொரு தெருவையும் வண்ணமயமாய் மாற்றுவது, இனிப்புகளும் பரிசுகளும் பரிமாறிக்கொள்வது என நம் கலாச்சாரத்தில் திருவிழாக்கள் அமர்க்களப்பட்டது.

இந்த தேசத்தில், தீபாவளி பெரும் முக்கியத்துவம் பெறுகிறது. தீபாவளி தீபங்களின் திருவிழா! இங்கே நகரங்களிலும் கிராமங்களிலும் மக்கள் ஆயிரக்கணக்கான தீபங்களை ஏற்றி கொண்டாடுவதை கண்கூடாகப் பார்த்திருப்போம்.




### ஏரோப்ளேன் பட்டாசு தந்த காயம்!

என் பால்ய நாட்களில் தீபாவளிப் பண்டிகை எனக்கு குதூகலம் அளிப்பதாக இருந்தது. பள்ளிக்குப் போக வேண்டாம் என்பது முக்கியக் காரணம், டிவி இல்லாததால் அத்தனை நேரத்தையும் கிரிக்கெட் விளையாடிக் கழித்தது இன்னொரு காரணம். தேசிய அணிகளின் பெருமைகளைச் சொல்ல டிவி இல்லை, அப்போது தேசிய அணியின் மீது எங்களுக்கு மோகமும் இல்லை. எங்கள் அணியே எங்கள் மனதுகளில் பிரதானமாய் இருந்த காலகட்டம் அது.

நான் சிறியவனாக இருந்தபோது, பட்டாசுகள் எனக்கு கொண்டாட்டம் அளித்தன. ஒரு நாள் அல்ல, மாதம் முழுவதும் பட்டாசுகளை வெடித்துக் கொண்டிருப்பேன். எனக்கு 6, 7 வயதிருக்கும் என்று ஞாபகம், ஏரோப்ளேன் என்றொரு பட்டாசு ரகம் உண்டு. அதில் ஒரு டப்பாவும், ஒற்றைத் திரியும் இருக்கும். படிக்கட்டில் நின்றுகொண்டு பட்டாசிற்கு தீ மூட்டினேன், லூசாக இருந்த என் சட்டைக்குள் நுழைந்து, காலரினூடே வெளியேறி கழுத்தைப் பதம்பார்த்தது. என் தந்தையோ மருத்துவர், காயம்பட்ட மகனைக் கண்டவுடன் முழு இல்லமும் பரபரப்பிற்கு உள்ளானது. மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று மருத்துவம் செய்ய வேண்டும் என்ற படபடப்பு அவர்களுக்கு, எனக்கோ அடுத்த பட்டாசை ஏவ வேண்டும் என்ற துடிப்பு.

எனக்கு 15 வயது இருக்கும் என நினைவு. ஜெயபிரகாஷ் நாராயண் அவர்களின் இயக்கம், "தீபாவளியன்று பட்டாசுகளை வெடிப்பதற்கு பதில், யாருக்காவது உதவுங்கள்," என்று குரல் கொடுத்துக் கொண்டிருந்த சமயம் அது. அவரது அறைகூவல் என் மனதினைத் தொட்டது. அதுவே நான் பட்டாசினை வெடித்த கடைசி ஆண்டும் கூட, அத்துடன் என் பட்டாசு சகாப்தமும் முடிவுக்கு வந்தது.

நம் கலாச்சாரத்தில் கொண்டாட்டத்தின் முக்கியத்துவம் பின்னாளில் நான் நகரத்தை விட்டு கிராமத்திற்கு விவசாயம் செய்யச் சென்றபோதே விழாக்களின் முக்கியத்துவம் எனக்குப் புரிந்தது.

கிராமங்களில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், பெரியவர்கள் என அனைவரும் ஒன்றாகக் கூடி, வீதியெல்லாம் அலங்கரித்து, கோலமிட்டு, தெருவெல்லாம் தோரணம் கட்டி, ஆடல்பாடல் என களைகட்டுகிறது நாட்டுப்புறம். பாரதத்தின் விழாக்கள் எத்தனை வண்ணமயமானது என எனக்கு புரிந்த சமயம் அது.

8000 ஆண்டுகளுக்கு முன்பே இந்த தேசத்தில் அறிவியல் இருந்தது. கலாச்சாரம் இருந்தது. மருத்துவம் சுகாதாரத்தைப் பற்றி மக்கள் அறிந்திருந்தனர். முறையான கழிவறைகள் மற்றும் தூய்மையாக வாழும் முறை இருந்தது. இதனால் மக்கள் நோயின்றி ஆரோக்கியமாக அமைதியாக வாழ முடிந்தது. மக்கள் அமைதியாக ஆரோக்கியமாக நிறைவுடன் வாழ்ந்தால்தானே கொண்டாட்டத்தைப் பற்றி நினைக்க முடியும், அதனால் இயல்பாகவே பாரதக் கலாச்சாரத்தில் ஆன்மீகம் வளர்ந்தது, கோயில்கள் எழுப்பப்பட்டன. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு செயலும் இங்கே கொண்டாட்டமாய் ஆனது. வருடத்தின் 365 நாட்களும் 365 திருவிழாக்கள் இங்கே இருந்தன. மனித வாழ்க்கையே கொண்டாட்டமாய் மாறிப்போவதற்கு இதுபோல் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால், தற்போது எஞ்சியுள்ளதோ 30, 40 விழாக்கள் மட்டுமே. அலுவலகமும், தொலைக்காட்சியும் நம் திருவிழாக்களை விழுங்கிவிட்டன. அதிலும் நடைமுறையில் தீவிரமாக இருப்பதென்னவோ 8, 10 விழாக்கள் மட்டுமே. இதனை அப்படியே விட்டுவிட்டால் அடுத்த தலைமுறைக்கு கொண்டாட்டங்களே இருக்காது. பொருள் ஈட்டுவதும் உணவு உண்பதும் என வாழ்க்கை கடந்து போய்விடும். பலரும் அப்படித்தானே வாழ்ந்து வருகிறார்கள்? விழா நாளன்று விடுமுறை, நீண்ட நேரத் தூக்கம், திரைப்படம், தொலைக்காட்சி பெட்டி என்றாகிவிட்டது வாழ்க்கை.

### ஈஷாவும் கொண்டாடங்களும்

நம் தேசத்தில் விழாக்கள் என்றால் அதிகாலை நான்கு மணிக்கு விழித்து, பெரும் உற்சாகத்துடன் மக்கள் தம்மை தயார் செய்துகொண்ட காலம் உண்டு. வீடு முழுக்க பல வேலைகள் நடந்திருக்கும். ஊர் மக்கள் ஓரிடத்தில் கூடி, அங்கு பெரும் கொண்டாட்டம் நிகழும். ஆனால், இன்றைய நிலைமையோ தலைகீழ். இந்தக் கலாச்சாரத்தை மீண்டும் புதுப்பிக்க வேண்டிய சூழ்நிலையில் இன்று நாம் இருக்கிறோம். இதற்காகவே அனைவரும் ஒன்றாக கூடி, ஓரிடத்தில் விழாக்களை எடுக்கும் விதமாக ஈஷாவில் கொண்டாட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பொங்கல், மஹாசிவராத்திரி, தீபாவளி மற்றும் தசரா என நான்கு பண்டிகைகளை ஈஷா யோக மையத்தில் கோலாகலமாகக் கொண்டாடுகிறோம்.

### தீபாவளியின் வரலாறு & ஆன்மீகப் பின்னணி

கலாச்சார ரீதியாய் தீபாவளியைக் கொண்டாட பலக் காரணங்கள் இருந்தாலும், வரலாற்று ரீதியாய் நாம் சொல்லி வரும் காரணம், நரகாசுரன் என்னும் தீய அரசனை கிருஷ்ணன் கொன்றான், அதனால் அது நரக சதுர்தசி ஆனது என்பதுதான். பலவிதங்களில் பார்த்தால், இந்நாள் மிகுந்த மங்களம் சேர்க்கும் நாளாக ஆகிறது. இந்நாளில் ஒருவர் லக்ஷ்மியைத் தேடினால் அவருக்கு லக்ஷ்மி கடாக்ஷம் கிட்டும் எனவும், ஒருவருக்கு ஆரோக்கியம் வேண்டுமென்றால், அன்னை சக்தி வருவாள் என்றும், கல்வி வேண்டுபவருக்கு சரஸ்வதி தேவி நலம் செய்வாள் என்றும் நம்பிக்கை நிலவுகிறது. இந்நாள் ஒருவருக்கு நல்வாழ்வு வழங்கும் என்பதை மரபுவழியாக நாம் பேசியே வந்திருக்கிறோம்.

தீபாவளி ஒளியின் திருநாள். இந்நாள் வெளியில் விளக்கேற்றுவதைப் பற்றி அல்ல, நம் அகத்தை ஒளியேற்றச் செய்வதற்கான ஒரு நாள். வெளிச்சம் என்றால் தெளிவு. தெளிவில்லாமல் நீங்கள் எதைச் செய்ய முற்பட்டாலும் அது அழிவை நோக்கி அழைத்துச் செல்லும். வெளிச்சம் வாழ்க்கைக்கு ஒளியூட்டும் என்று நாம் சொல்வது, வெறும் நம் கண்ணால் காண்பதைப் பற்றி மட்டும் சொல்லவில்லை, பலவிதங்களில் நமக்குள் அது தெளிவினை உண்டாக்கும் என்பதால்தான். உங்களைச் சுற்றி நடப்பதை நீங்கள் எத்தனை தெளிவான பார்வையுடன் காண்கிறீர்கள் என்பதே உங்கள் வாழ்க்கையை நீங்கள் எவ்வாறு நடத்துகிறீர்கள் என்பதை நிர்ணயிக்கும்.

### பலகாரங்களில் படிந்திருக்கும் பேரன்பு

நமக்கு நன்மை விளைவிக்கும் இந்த அற்புத நாளை பட்டாசு வெடித்துக் கொண்டாடுகிறோம். பட்டாசு வெடிப்பது, புத்தாடை அணிவது மட்டுமல்ல, நம் நாட்டில் இனிப்புப் பலகாரங்கள் இல்லாமல் பண்டிகைகள் எப்படி நிறைவுபெறும்? அத்தையும் மாமியும் மாவு எடுத்துக் கொடுக்க, பாட்டியின் கைப்பதம் சுவையை எடுத்துக் கொடுக்கும். பாரதத்தில் செய்யப்படும் பலகாரங்களைச் சமைப்பதற்கு ஆழ்ந்த ஈடுபாடு அவசியம். மக்கள் தங்கள் வாழ்க்கையை நேசித்தால் மட்டுமே இதுபோன்ற ஈடுபாட்டுடன் வாழ முடியும். இல்லையென்றால், அரிசியை குக்கரில் போடு, சக், சக்! மூன்று நிமிடத்தில் சாப்பாடு தயார்!

எங்கள் வீட்டில் உணவு தயாரிக்கும்போது என் அத்தைகளும், பாட்டிகளும் பாட்டுப் பாடிக்கொண்டே உணவு சமைப்பார்கள். என் அன்னையும் அப்படித்தான். உடலுக்கு மட்டும் உணவல்ல, அதில் அன்பு இருக்கும். ஈடுபாடு இருக்கும். அதில் கைப்பக்குவம் இருக்கும். அந்த உணவை உண்ணும் மனிதரின் உடலும் அதுபோலவே உருவாகும்.

### சங்கரன் பிள்ளையின் தீபாவளி ஷாப்பிங்

ஒருமுறை சங்கரன் பிள்ளையை காவல்துறை கைது செய்து நீதிபதியின் முன் நிறுத்தினர். நீதிபதி என்ன தவறு செய்தாய் என்று கேட்டார். "நான் ஒன்றும் செய்யவில்லை. தீபாவளிக்கு ஷாப்பிங் செய்யச் சென்றேன்," என்றார். "என்ன ஷாப்பிங் செய்ததற்காக நீ கைது செய்யப்பட்டாய், என்ன கொடுமை சார் இது?" என்றார் நீதிபதி. "நான் சற்று முன்னதாக கடைக்கு சென்றுவிட்டேன், அதற்குப் போய் என்னை கைது செய்துவிட்டார்கள்," என்றார் சங்கரன் பிள்ளை. "காலையில் சீக்கிரமாகவே கடைக்கு போவது ஒன்றும் தவறான செயல் அல்ல. சரி நீ எப்போது ஷாப்பிங் போனாய்?" என்று நீதிபதி கேட்க, "கடை திறப்பதற்கு முன்னரே ஷாப்பிங் செய்தேன்," என்றார் சங்கரன் பிள்ளை. நாம் விழாக்களை இப்படி தவறாகப் புரிந்துகொண்டாலும் ஒவ்வொரு விழாவிற்கும் ஆழமான அடிப்படை இருக்கிறது.

### ஒவ்வொரு நாளும் தீபாவளி ஆகட்டும்

வாழ்வை விளையாட்டைப் போல அணுகுவதற்காகவே நம் கலாச்சாரத்தில் கொண்டாட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. உங்கள் வாழ்வில் கொண்டாட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதே தீபாவளித் திருநாளின் நோக்கம். பட்டாசுகளும், மத்தாப்புகளும் உங்களுக்குள் இருக்கும் நெருப்பை மூட்டிவிடட்டும். ஏதோ ஒருநாள் மட்டும் கொண்டாடி, மறந்து போவதற்கான நாள் அல்ல தீபாவளி, உங்களுக்குள் ஒவ்வொரு நாளும் தீபாவளியாகத்தான் இருக்க வேண்டும். நாம் சும்மா அமர்ந்தாலே நம் உயிர், நம் சக்தி, நம் உடல் ஆகியவை உயிருள்ள ஒரு வெடிகுண்டைப் போல் உயிரோட்டமாய் இருக்க வேண்டும்.

---

தீபாவளியை முன்னிட்டு

## கோவையில் பேருந்து நிலையங்கள் மாற்றம்...

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பயணிகள் வசதிக்காக கோவையில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

நாடெங்கும் வருகிற 12ஆம் தேதி தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது. இதையொட்டி வெளி ஊர்களில் உள்ளவர்கள் தங்கள் குடும்பத்துடன் சொந்த ஊருக்கு செல்வர். இதனால் பேருந்து, ரயில் நிலையங்களில் கூட்ட நெரிசல் அதிகரிப்பை கட்டுக்குள் கொண்டு வர கோவை போக்குவரத்து துறை சார்பில் பேருந்து நிலையங்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

அதன்படி சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திலிருந்து மதுரை தேனி மற்றும் தென் மாவட்டங்களுக்கும், சூலூர் பேருந்து நிலையத்திலிருந்து கரூர் திருச்சி மார்க்கமாக செல்லும் பேருந்துகளும், மத்திய பேருந்து நிலையத்திலிருந்து சேலம், திருப்பூர், ஈரோடு, ஆனைகட்டி, மேட்டுப்பாளையம், சத்தியமங்கலம் மார்க்கமாக செல்லும் பேருந்துகளும், புதிய பேருந்து நிலையத்திலிருந்து மேட்டுப்பாளையம் சாலை வழியாக ஊட்டி கூடலூர் செல்லும் பேருந்துகளும் இயக்கப்பட உள்ளன.

மேலும், கோவை மதுரைக்கு 100 பேருந்துகள், கோவை திருச்சிக்கு 80 பேருந்துகள், கோவை தேனிக்கு 50 பேருந்துகள், கோவை சேலத்திற்கு 60 பேருந்துகள் என சிறப்பு பேருந்து வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த பேருந்து நிலையம் மாற்றம் 9ம் தேதி முதல் 11ம் தேதி வரை செயல்படுத்தப்பட உள்ளதாகவும், மேற்குறிப்பிட்ட அனைத்து பேருந்து நிலையங்களுக்கும் செல்ல காந்திபுரம் நகரப் பேருந்து நிலையம் மற்றும் உக்கடம் பேருந்து நிலையத்திலிருந்து இணைப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

To Advertise in THE COVAI MAIL

84898 12341, 84895 12341

covaimailads@gmail.com, report2tcm@gmail.com

Disclaimer: The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.

## ஸ்ரீ ராமகிருஷ்ணா மகளிர் கல்லூரியில் பட்டமளிப்பு விழா




நிகழ்வில் மாணவிக்கு பட்டம் வழங்குகிறார் சிறப்பு விருந்தினர் வெங்கட நாராயணன். உடன் எஸ்.என்.ஆர் சன்ஸ் அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலர் சுந்தர் மற்றும் கல்லூரி முதல்வர் சித்ரா.

ஸ்ரீராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் 29ஆவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு சிறப்பு விருந்தினராக சென்னையில் உள்ள ரானே குரூப் நிறுவனத்தின் மனிதவள மேம்பாட்டு துறைத்தலைவர் வெங்கட நாராயணன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அவர் பேசுகையில், கல்வியின் முக்கியத்துவம் பற்றியும், மாணவிகள் பட்டம் பெற்ற பிறகும் தொடர்ந்து கற்க வேண்டியதன் அவசியம் பற்றியும் எடுத்துரைத்தார். புதுமைகளை கற்றல், திறமைகளை வளர்த்துக் கொள்ளுதல் போன்றவை நம் வாழ்நாள் முழுவதும் கட்டாயம் தொடர வேண்டுமென்று வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சிக்கு, எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலர் சுந்தர் தலைமை தாங்கி பேசுகையில், மாணவிகள் பட்டம் பெற்ற இந்த நாள், அவர்களின் வாழ்க்கையில் கொண்டாடப்பட வேண்டிய நாள் என்று குறிப்பிட்டு வாழ்த்தினார்.

இதையடுத்து, கல்லூரி முதல்வர் சித்ரா மாணவிகளின் சாதனைகளையும் பல்கலைக்கழக அளவில் மாணவிகள் பெற்ற சிறப்புகளையும் குறிப்பிட்டு பட்டம் பெற்ற அனைவரையும் பாராட்டி பேசினார்.

நான்கு தங்கப்பதக்கம் உள்பட பல்கலைக்கழக அளவில் 20 சிறப்பிடங்களை கல்லூரி மாணவிகள் பெற்றுள்ளதோடு, இளநிலை மற்றும் முதுநிலைப் பிரிவுகளில் 650 பேர் பட்டம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குங்கள்

### - கருத்தரங்கில் பூபதி சக்திவேல் பேச்சு

இந்துஸ்தான் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் பயோமெடிக்கல் துறை சார்பாக பயோட்ரான்ஸ் 2023 எனும் கருத்தரங்கு நடைபெற்றது.

பூபதி சக்திவேல் பிரசாந்த் மெடிக்கல் டெக்னாலஜி கருத்தரங்கை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். மாணவர்கள் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க வேண்டும் எனவும் அதற்கான வழிமுறைகள் குறித்தும் தெளிவாக எடுத்துரைத்தார், மேலும் வேலை வாய்ப்பு எவ்வாறு உள்ளது அதற்கான கல்வி முறை குறித்து உரையாற்றினார். கருத்தரங்கின் விழா மலரை பூபதி சக்திவேல் வெளியிட கல்லூரியின் முதல்வர் ஜெயா பெற்றுக் கொண்டார். இக்கருத்தரங்கில் 300க்கும் மேற்பட்ட பல்வேறு கல்லூரியை சேர்ந்த மாணவர்கள் பங்கேற்று தங்களது கட்டுரைகளை சமர்ப்பித்தனர். மேலும் வினாடி வினா,சுய கண்டுபிடிப்பு கண்காட்சி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி திறன் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் துறைத் தலைவர் முனைவர் சரவண சுந்தரம் வரவேற்புரையாற்றினார். கருத்தரங்கை கல்லூரி முதல்வர் ஜெயா முன்னிலை வகித்தார். இக்கருத்தரங்கு ஏற்பாடுகளை பயோமெடிக்கல் துறை ஆசிரியர் தீபா ராணி கவனித்துக் கொண்டார்.

## புதிய சிமெண்ட் நிறுவனத்தை துவக்கியது எஸ்ஆர்எம் குழுமம்




எஸ்ஆர்எம்பிஆர் சிமெண்ட்ஸ் எனும் புதிய நிறுவனத்தை எஸ்ஆர்எம் குழுமம் துவக்கியுள்ளது. இதற்கான டீலர்கள் கூட்டம் சென்னை கிண்டியில் உள்ள ரமடா ஓட்டலில் நடைபெற்றது. இதில் எஸ்ஆர்எம் குழும தலைவர் ரவி பச்சமுத்து, நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி ஓம் பிரகாஷ் மற்றும் விளம்பர தூதர் நடிகர் சத்யராஜ் ஆகியோர் பங்கேற்றனர்.

Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006 and Printed at Sri Saraswathy Printers, 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006. Editor: K.C.Srinivasan


# ஸ்ரீ அன்னபூர்ணாவில் தீபாவளி ஸ்வீட் மேளா




ஸ்ரீ அன்னபூர்ணா நிர்வாக இயக்குநர் சீனிவாசன், ஆர்.எஸ். புரம் கிளையில் தீபாவளி ஸ்வீட் மேளாவை தொடங்கி வைத்தார். முதல் விற்பனையை PSGR கிருஷ்ணம்மாள் கல்லூரி செயலாளர் யசோதா பெற்றுக் கொண்டார். உடன் கிளை மேலாளர் ராஜேஷ், ஐகான் அன்னபூர்ணாவின் பொதுமேலாளர் நிஜோ உள்ளிட்டோர்.







மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள கிளையின் தீபாவளி ஸ்வீட் மேளாவை ஸ்ரீ அன்னபூர்ணா குழுமத்தின் முதன்மை செயல் அதிகாரி ஜெகன் தாமோதரசாமி, நிதி மேலாளர் சிவ ஷங்கர் ஆகியோர் தொடக்கி வைத்தனர். முதல் விற்பனையை சோடல்டெக் குழுமத்தின் இயக்குநர் சுப்ரமணியம், தலைமை மேலாளர் மூர்த்தி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஆண்டுதோறும் ஸ்ரீ அன்னபூர்ணா சார்பாக ஸ்வீட் மேளா நடைபெறுவது வழக்கம். அந்த வகையில் இந்த ஆண்டு நடைபெறும் ஸ்வீட் மேளாவானது பீப்பிள்ஸ் பார்க், மேட்டுப்பாளையம் சாலை , சாய்பாபா காலனி, ஆர்.எஸ்.புரம் , கே.எம்.சி.எச், கணபதி உள்ளிட்ட அனைத்து அன்னபூர்ணா கிளைகளிலும் நவம்பர் 7 முதல் 11ஆம் தேதி வரை நடைபெறுகிறது. மேலும், சிறப்பம்சமாக அவிநாசி நெடுச்சாலையில் புதிதாக தொடங்கியுள்ள கிளையில் மிக பிரமாண்டமாக ஸ்வீட் மேளா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இது குறித்து, ஸ்ரீ அன்னபூர்ணாவின் செயல் இயக்குநர் விவேக் சீனிவாசன் கூறுகையில்;

இந்த ஸ்வீட் மேளாவில் எலைட் காலெக்க்ஷன், பிரீமியம் காலெக்க்ஷன், கிப்ட் டின்ஸ், பிரீமியம் லட்டு, பிரீமியம் மைசூர்பா, காஜூ பைட்ஸ் போன்ற பல வகையான இனிப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

சுத்தமான பசும் நெய்யினால் செய்த இனிப்புகளை மிக தரமாகவும், சுவையாகவும் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவது அன்னபூர்ணாவின் தனித்துவமாகும். அதன் வரிசையில், பிரீமியம் லட்டு காலெக்க்ஷனில் நட்ஸ் வகையிலான ரோஸ் ஆல்மண்ட், புயூர் பிஸ்தா, சாக்லேட் ஆல்மண்ட் இனிப்புகள் உள்ளன. இதைத்தொடர்ந்து, பிரீமியம் மைசூர்பா காலெக்க்ஷனில் பாதம், பிஸ்தா ரெட் வெல்வெட், டேட்ஸ், கருப்பட்டி போன்ற 6 புதுவிதமான மைசூர்பாக்கள் இந்த ஆண்டு ஸ்வீட் மேளாவில் இடம் பெற்றிருக்கிறது.

இந்த மேளாவில் இனிப்பு மற்றும் கார வகைகள் ரூ 190 முதல் ரூ1000 வரை விற்பனை செய்யப்படுகிறது. மேலும், அன்னபூர்ணாவின் "கிங் ஆப் ஸ்வீட்" எனப்படும் அமுத லட்டு, திருப்பதி லட்டு சுவையில் இருப்பதால் மக்களின் விருப்ப பட்டியலில் என்றுமே இடம்பிடித்திருக்கிறது. உடல் நலத்தில் கவனம் செலுத்துபவர்களுக்கென விலை மதிப்புள்ள தென்னை சர்க்கரையினால் இனிப்பு தயாரித்து விற்பனை செய்து வருகிறோம்.

ஒவ்வொரு வருடமும் புது புது ரகங்களில் இனிப்புகளையும் கார வகைகளையும் அறிமுகப்படுத்தி வரும் ஸ்ரீ அன்னபூர்ணாவில் இந்த தீபாவளியை உங்கள் பிரியமானவர்களுடன் கொண்டாட கிப்ட் கூப்பன்கள் ரூ.100 முதல் ரூ.1000 வரை அனைத்து கிளைகளிலும் வழங்கி வருகிறோம். எனவே, உங்கள் அன்பானவர்களுக்கு கிப்ட் கூப்பன்களை பரிசளித்து ஸ்ரீ அன்னபூர்ணா இனிப்புகளுடன் இந்த தீபாவளியை மிக குதூகலமாக கொண்டாடி மகிழுங்கள்., என்றார்.




ஸ்ரீ அன்னபூர்ணா பீப்பிள்ஸ் பார்க் ஹோட்டலில் தீபாவளி ஸ்வீட் மேளாவை அக்குழுமத்தின் செயல் இயக்குநர் விவேக் சீனிவாசன் மற்றும் சித்ராஸ்ரீ ஆகியோர் தொடக்கி வைத்தனர். முதல் விற்பனையை பண்ணாரி அம்மன் குழுமத்தை சேர்ந்த காயத்ரி ஆறுமுகம் பெற்றுக்கொண்டார்.

# தடைகளை வாய்புகளாக பாருங்கள்

**- சுதா சேஷய்யன் பேச்சு**




பி.எஸ்.ஜி செவிலியர் கல்லூரியில் பயின்ற முன்னாள் மாணவர்களான சிவபாலன், வள்ளியம்மாள் மற்றும் ஜமுனா ராணி ஆகியோருக்கு சிறந்த முன்னாள் மாணவர் விருது வழங்கப்பட்டது. உடன், பி.எஸ்.ஜி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் எல்.கோபாலகிருஷ்ணன், தலைவர், ஜி.ஆர் கார்த்திகேயன் மற்றும் கல்லூரி முதல்வர் ஜெயசுதா.

பி.எஸ்.ஜி செவிலியர் கல்லூரியின் நிறுவன தின விழா, பி.எஸ்.ஜி மருத்துவ அறிவியல் மற்றும் ஆராய்ச்சி கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்றது.

செவிலியர் கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் ஜெயசுதா வரவேற்புரை வழங்கினார். மேலும், நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உதவிய அனைவரின் கடின உழைப்பையும், ஆதரவையும் நினைவு கூர்ந்து நன்றி தெரிவித்தார்.

பி.எஸ்.ஜி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் எல்.கோபாலகிருஷ்ணன், விழாவிற்கு தலைமை வகித்து, பேசுகையில், பி.எஸ்.ஜி செவிலியர்கல்லூரியானது 28 மாணவர்களை கொண்டு 1994 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மகத்தான செவிலியர் துறையில் தரமான கல்வியை வழங்க வேண்டும் என்று முடிவு செய்து தொடங்கப்பட கல்லூரி. இளநிலை, முதுநிலை பிரிவில் 460 மாணவர்கள் பயில்கின்றனர். மேலும், நர்சிங் கல்வியில் பிஎச்.டி பட்டப் படிப்பை வைத்திருப்பது மிக முக்கிய சாதனையாக பார்க்கிறோம் என்றார்.

## முன்னாள் மாணவர் விருது

நிகழ்ச்சியில் முக்கிய நிகழ்வாக, பி.எஸ்.ஜி செவிலியர் கல்லூரியில் பயின்ற முன்னாள் மாணவர்களான வள்ளியம்மாள் (B.Sc (N) 1995 - 1999), சிவபாலன் (B.Sc (N) 1996 - 2000) மற்றும் ஜமுனா ராணி (B.Sc (N) 1997 - 2001) ஆகியோருக்கு சிறந்த முன்னாள் மாணவர் விருது 2023" வழங்கி கவுரவிக்கப்பட்டது.

சிறப்பு விருந்தினர் டாக்டர் சுதா சேஷய்யன், தமிழ்நாடு டாக்டர். எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேசுகையில், இளமையின் தொடக்க காலத்தில் இருக்கும் மாணவர்கள் செவிலியர் துறையின் முக்கிய அம்சங்களை உணர்ந்து கொள்ள வேண்டும். சமூக சேவை பணியில் செவிலியர் பணி இன்றியமையாத ஒன்று. தடைகளை வாய்புகளாக பாருங்கள் நிச்சயம் வாழ்வில் வெற்றி பெற உதவும் என்று மாணவர்களுக்கு அறிவுருத்திய அவர், செவிலியர் பணி தொடங்கிய முதல் நாளில் இருந்தே பெண்களின் பங்களிப்பு மேன் மேலும் வலுவடைந்து வருகிறது என்றார்.

# 'பாரத் சைக்கிள் சேலஞ்ச்' இந்துஸ்தான் மாணவர்கள் முதலிடம்

அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சிலின் தேசிய அளவிலான பாரத் சைக்கிள் சேலஞ்ச் போட்டியில் இந்துஸ்தான் பொறியியல் கல்லூரி மாணவர்கள் இவி கார்கோ கேட்டகிரியில் முதலிடத்தை பிடித்து சாதனை படைத்தனர்.

ஒரு மின்சார சார்ஜுக்கு 200 கிலோ மீட்டர் செல்லக்கூடிய வகையில் சிறிய அளவிலான மின்சாரம் மற்றும் மிதிவண்டியாக ஓடக்கூடியது. அதிகபட்சம் 200 கிலோ கிராம் எடை வரை சரக்கை சுமந்து செல்லும் வகையில் தயாரிக்கப்பட்ட வண்டியில் நான்கு விதமான கருவிகள் பொருத்தப்பட்டு, கூட்ஸ் டோர் டெலிவரி, காய்கறி விற்பனை, சூரிய ஒளி பயன்பாட்டோடு ஐஸ்கிரீம் விற்பனை மற்றும் குழந்தைகளோடு பயணிக்கும் வகையில் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த போட்டியில் 600க்கும் மேற்பட்ட அணியினர் பங்கேற்றனர். தங்களுடைய சிறப்பான தொழில்நுட்பத்தாலும், கட்டமைப்பினாலும், மற்ற திறமைகளாலும் இந்துஸ்தான் மாணவர்கள் முதலிடத்தை பிடித்துள்ளனர்.இந்தக் குழுவில் இயந்திரவியல் துறை, விவசாயத்துறை, மின்சாரத்துறைகளைச் சேர்ந்த நான்கு மாணவர்களும் ஒரு மாணவியும் பங்கேற்றனர்.




தேசிய அளவில் இவி கார்கோ கேட்டகிரியில் முதலிடம் பிடித்து வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுத்தொகையான ரூபாய் 1 லட்சம் காசோலையை ஏஐசிடிஇ தலைவர் சீத்தாராம் வழங்கினார்.

இந்த குழுவுக்கு முனைவர் ராஸ் மேத்யூ வழிகாட்டியாக பங்களித்தார். இந்த வண்டியை உருவாக்க ஏஐசிடிஇ உதவித் தொகையாக ரூ.40 ஆயிரம் கொடுத்து இரண்டு மாத கால அவகாசம் கொடுத்தது. இப்பொழுது இந்த சிறப்பு வாய்ந்த போட்டியில் வெற்றி பெற்றதற்கு பரிசுத்தொகையாக ரூபாய் ஒரு லட்சம் காசோலையை ஏஐசிடிஇ தலைவர் சீத்தாராம் வழங்கினார்.

இந்த சிறப்பான சாதனையை கல்லூரி செயலாளர் சரஸ்வதி கண்ணையன், நிர்வாக செயலாளர் பிரியா சதீஷ், தலைமை நிர்வாக அதிகாரி கருணாகரன், கல்லூரி முதல்வர் ஜெயா, டீன் இன்னோவேஷன் சிவா மற்றும் துறைத்தலைவர்கள் தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# தேசிய ஜூனியர் தடகள போட்டி தொடக்கம்

கோவையில் 38வது தேசிய ஜூனியர் தடகள போட்டி நேரு விளையாட்டு மைதானத்தில் தொடங்கியது.

இந்த போட்டியின் தொடக்க விழாவிற்கு இந்திய தடகள கூட்டமைப்பின் தலைவர் தேவாரம் வரவேற்றார். இதில் தமிழக தடகள சங்கத் தலைவர் லதா, கோவை மாவட்ட ஆட்சியர் உட்பட பலர் கலந்து கொண்டனர். நேரு விளையாட்டு மைதானத்தில் அண்மையில் தேசிய தடகள போட்டிகளை நடத்துவதற்காக புதிய சிந்தடிக் ஓடுதளம் அமைக்கப்பட்டது. இந்த போட்டிகளில் 29 மாநிலங்களிலிருந்து சுமார் 2,200 தடகள வீரர்கள் பங்கேற்றனர். இதில் தமிழகத்திலிருந்து 175 விளையாட்டு வீரர்கள் (92 ஆண்கள் மற்றும் 83 பெண்கள்) போட்டியிடுகின்றனர். மேலும், சாம்பியன்ஷிப் போட்டியில் 14, 16, 18 மற்றும் 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் பங்கேற்கும் எட்டு பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்படுகிறது.

# சாதனையாளர் முத்து ராஜாவுக்கு பாராட்டு




கங்கா மருத்துவமனையில் முதுகு தண்டுவட அறுவைச் சிகிச்சை செய்து மறுவாழ்வு பெற்ற முத்து ராஜா, ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியில் பங்குபெற்று வெண்கலம் வென்று சாதனை படைத்துள்ளார். இதையடுத்து, கங்கா மருத்துவமனை மற்றும் கோவை மத்திய ரோட்டரி கிளப் சார்பில் அவருக்கு பாராட்டு விழா புதன்கிழமை கங்கா முதுகெலும்பு காயம் மறுவாழ்வு மையத்தில் நடத்தியது. இந்நிகழ்வில் கங்கா மருத்துவமனையின் இயக்குனர் டாக்டர் ராஜசேகர், பிசியோதெரபி ஃபேம் க்ளப் நிறுவனர் முருக பிரபு, கோயம்பத்தூர் சென்ட்ரல் ரோட்டரி கிளப் தலைவர் அஷ்வின் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# ஜே.கே.பி மருத்துவ மையத்தின் முப்பெரும் விழா




டாக்டர் ஜே.கே.பி மருத்துவ மையத்தின் முப்பெரும் விழா நடைபெற்றது. இதில் ஜே.கே.பி. மருத்துவ மையத்தின் 18ஆம் ஆண்டு விழா, புத்தக வெளியீட்டு விழா, இதய கோவில் திறப்பு விழா போன்ற முப்பெரும் நிகழ்வுகள் நடந்தது. இதன் ஒரு பகுதியாக 'துடிக்கின்ற நெஞ்சென்று ஒன்று' என்ற புத்தகத்தை இந்திய காற்றாலை சக்தி சங்கத்தின் தலைவர் கஸ்தூரி ரங்கன் வெளியிட வேதநாயகம் மருத்துவமனையின் தலைவர் கந்தசாமி பெற்றுக்கொண்டார். இதில் டாக்டர் ஜே.கே.பி மருத்துவ மையத்தின் தலைவர் பெரியசாமி, இயகோகா சுப்ரமணியம், விவசாய கல்லூரியின் முன்னாள் டீன் கல்யாண சுந்தரம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# இனிக்கும் தீபாவளி... ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் உடன்!



ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸின் இனிப்பு திருவிழாவின் முதல் விற்பனையை ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸின் தலைவர் எம்.கிருஷ்ணன் தொடங்கி வைக்க, ஆடிட்டர் பிரபு பெற்றுக்கொண்டார்.


தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் சார்பில் மூன்று நாள் இனிப்பு திருவிழா, ரேஸ் கோர்ஸ் பகுதியில் அமைந்துள்ள சாரதாம்பாள் ஹாலில் நடைபெற்றது.

இது குறித்து ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸின் இயக்குநர் வைஷ்ணவி பேசுகையில், கோவை மக்களுக்கு ஸ்வீட் ஷாப்பிங் அனுபவத்தைப் புதுமையாக வழங்க வேண்டும் என்ற எண்ணத்தில் புதிய முயற்சியாகத் தொடங்கி இருக்கிறோம். ஒரே இடத்தில் விசாலமான பார்க்கிங் வசதியுடன், அனைத்து விதமான இனிப்புகளை வாடிக்கையாளர்கள் வசதிற்கேற்ப வாங்க வேண்டும் எனும் நோக்கில் இந்த ஆண்டு ஸ்வீட் கார்னிவல் நடத்தி வருகிறோம்.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த இனிப்பு திருவிழாவில் 50 க்கும் மேற்பட்ட கிப்ட் பாக்சஸ் வெவ்வேறு விலைப் பட்டியலில் வகைப்படுத்தி உள்ளோம். நெய் வகை , காஜூ வகை மற்றும் பிரீமியம் வகை இனிப்புகள் என பலதரப்பட்ட வகையான இனிப்புகள் காட்சிப்படுத்தப்படுகிறது. மேலும், இனிப்பு வகையின் பெயர்கள் மற்றும் விலை பட்டியல் போன்ற விவரங்களை க்யூஆர் கோடு ஸ்கேனர் மூலம் தெரிந்து கொள்ளலாம். இந்த முறையானது வாடிக்கையாளர்களுக்கு எளிமையான ஷாப்பிங் அனுபவத்தை வழங்கும் என்றார்.

மேலும், இங்கு குழந்தைகளைக் கவரும் வகையில் தத்ரூபமாக ரோபோடிக் யானை வைக்கப்பட்டிருப்பது வாடிக்கையாளர்களுக்குப் புதுவித ஷாப்பிங் அனுபவத்தை அளிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.






## பி.எஸ்.ஜி சர்வஜன பள்ளியில் தீபாவளி கொண்டாட்டம்



தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பி.எஸ்.ஜி சர்வஜன மேல்நிலைப் பள்ளியில் தீபாவளி கொண்டாட்டம் அண்மையில் நடத்தப்பட்டது. இதில் பி.எஸ்.ஜி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் கோபாலகிருஷ்ணன் கலந்துகொண்டு மாணவர்களுக்கு புத்தாடைகள், காலணிகள், இனிப்புகள் மற்றும் பட்டாசு பெட்டி வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர்கள், பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் பலர் கலந்துகொண்டனர்.




## விழிப்புணர்வு பேரணி..




உலக பக்கவாத தினத்தை முன்னிட்டு கே.எம்.சி.ஹெச் செவிலியர் கல்லூரி மாணவர்கள் விழிப்புணர்வு பேரணியை அண்மையில் நடத்தினர். வாகராயம்பாளையம் ஊராட்சி அலுவலகத்தில் துவங்கி ஆரம்ப சுகாதார நிலையத்தில் நிறைவு பெற்ற பேரணியில் பக்கவாத விழிப்புணர்வு முழக்கம், பதாதைகள் ஏந்தப்பட்டன. வாகராயம்பாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் சசிகுமார் மற்றும் ரோட்டரி கிளப், பன்னாட்டு சுழற்ச்சங்கம் தலைவர் பாலகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்று நிகழ்ச்சியினை சிறப்பித்தனர். கல்லூரி முதல்வர் மாதவி பக்கவாதத்திற்கான காரணங்கள் தடுப்பு முறைகள் பற்றி பொதுமக்களிடம் எடுத்துக் கூறினார். மேலும், மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக வில்லுப்பாட்டு மற்றும் குறுநாடகமும், மூன்றாம் ஆண்டு செவிலியர் கல்லூரி மாணவிகளால் அரங்கேற்றப்பட்டது.

